**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - 2018**

---

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2217 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. வீதித் துறை நிறுவனங்களை மேம்படுத்துதல் மற்றும் பைலட் செயற்றிறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தங்களை விருத்தியாக்குதல் என்பவற்றினூடாக தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,655 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 208 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,275 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் புரிந்துணர்வு ஒப்பந்தமானது 2008 பெப்ரவரி 15 இல் கையொப்பமிடப்பட்டதுடன் கடன் ஒப்பந்தமானது உண்மையான கடன் தொகைக்குள் செயற்றிட்டத்தின் விசாலத்தை மாற்றுவதற்காக 2008 மே 27 இல் திருத்தப்பட்டது. மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, 2010 ஒக்டோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி இலக்க மற்றுமொரு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் ரூபா 880 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் ஒதுக்குவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 9,350 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 85 மில்லியனை ஒதுக்குவதற்கு 2011 ஒக்டோபர் 11 இல் ஆசிய அபிவிருத்தி நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் 2767 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க துணைக் கடன் உடன்படிக்கை கூட கையொப்பமிடப்பட்டிருந்தது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இருப்பினும், நெடுஞ்சாலை செயலக கட்டிடத்தின் பூர்த்தியாக்களில் கானப்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்தின் நிதி நடவடிக்கைகள் 2015 ஜூலை 30 இல் மூடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிகழ்ச்சித்திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

(அ) மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு

பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

(ஆ) சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

(இ) முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

(ஈ) வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டியிருந்த மொத்தமாக ரூபா 116.83 மில்லியன், கணக்கீட்டு தவறு காரணமாக ரூபா 14.39 மில்லியனினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பொறுப்புக்களின் குறை மதிப்பீடுகள். | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் மாத்திரமே வழங்கப்படவில்லை. | மீளாய்வாண்டில் இறுதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய மீதிகள் கணக்கிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்ட நிர்மான வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | கணக்கீட்டு கொள்கைகளின் தவறான பயன்பாடு. | கொடுத்து தீர்க்கப்படாத ஒப்பந்ததாரர்களின் கொடுப்பனவுகள் காரணமாக, முடிவுறுத்தல் | பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வீதி |

| | | | |
|---|---|---|---|
| பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும், உரிய அமுல்படுத்தல் முகவரிற்கு செயற்திட்டத்தின் சொத்துக்களை கையளிப்பதற்கும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுறுத்தல் நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்ககை தயாரிப்பதற்கும் நிறைவேற்று முகவரினால் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | கணக்கு தயாரிக்கப்பட்டிராததுடன் 2019 இல் அதனை தீர்த்து முடிவுறுத்தல் கணக்குகளை தயாரிக்க எதிர் பார்க்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றம் செய்யவும் முடிவுறுத்தல் கணக்குகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்த 09 தேசிய வீதிகளின் 279 கிலோமீற்றர்களில் 05 தேசிய வீதிகளின் 244 கிலோமிற்றர்களின் மேம்படுத்தல் மற்றும் புனரமைத்தல் வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திடடத்தினால் பூர்த்தியாக்கப்பட்டு அமுல்படுத்தல் முகவரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நெடுஞ்சாலை செயலக கட்டிடத்தின் நிர்மான வேலைகள் ரூபா 2,918 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்திளால் பூர்த்தியாக்கப்பட்டு 2016 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கட்டிடத்தின் தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கையளிப்பதற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடத்திற்கான உடன்பாட்டு சான்றிதல் 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிறாமை அவதானிக்கப்பட்து.

### 3.2 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இருக்கும் தகவல்களின் பிரகாரம், ரூபா 1,163.14 மில்லியன் பெறுமதியான இழப்பீடுகள் 4,343 காணித்துண்டுகளை சவீகரிக்க செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் காணித்துண்டுகளின் உரிமைத்துவத்தினை | இழப்பீடுகள் மீதான கிரயங்கள் மற்றும் அதன் மீதான வட்டி கொடுப்பனவுகள் என்பன அதிகரிப்பதற்கான சாத்தியம். | காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழான பிரிவு 44 இன் வழங்களிற்காக, வட்டி கொடுப்பனவு உள்ளடங்களாக இழப்பீடுகள் செலுத்தப்படும். | சொத்துக்களின் உரிமைகளை மாற்றம் செய்ய துரிதப்படுத்திய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை மேலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது.